**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் - 2017**

---

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகளும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கஎனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக்கொண்டுள்ளேன்என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள்**

பல்கலைக்கழக கலை கலாச்சார பீடத்தின் பட்டப்பின்படிப்பு பிரிவின் கீழுள்ள வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (சீஈடீபிஎல்) மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பட்டப்பின்படிப்பு பிரிவு ஆகியன மீளாய்வாண்டில் வெளிவாரிப் பட்டப் படாநெறிகளையும் முதுமானிப் பட்டப் பாடநெறிகளையும் நடாத்தி ரூபா 10,692,846 தேறிய வருமானமொன்றை ஈட்டியிருந்ததுடன் மீளாய்வாண்டில் உள்ளவாறு ரூபா 125,004,717 மொத்தச் சொத்துக்களையும் உருவாக்கியிருந்தன. இருப்பினும், அந்தப் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்கள், பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் கூட்டிணைக்கப் பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் திரட்டிய நிதியம் மற்றும் மொத்தச் சொத்துக்கள் என்பன ரூபா 125,004,717 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

**2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளித்தரப்பினர்களால் 2005 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 16 சட்டரிதியான வழக்குகளில் நான்கு வழக்குகள் 2018 ஆகஸ்ட் 08 இல் உள்ளவாறு நீதிமன்றத்திலும் பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டுச் சபையிலும் விசாரிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இன் 129(டீ) (i) ஆம் பந்தியின் பிரகாரம் அது தொடர்பான பொருத்தமான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாக தேய்விடப்பட்டிருந்த ரூபா 101,385,503 கிரயம் கொண்ட சொத்துக்கள், அவற்றின் பொருளாதாரப் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பிடுவதற்கும் அதற்கமைய கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்பட்டிருந்தன. அத்துடன், எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 03 இன் பிரகாரம் அவற்றின் மீதான மதிப்பீட்டு வழு மீளமைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க மூலதன மானியங்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களிற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,500.74 மில்லியன் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த மானியங்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிரந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருபத்தியோராம் நூற்றண்டிற்கான உயர் கல்வி (எச்ஈரீசீ) செயற்திட்டத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 65,568,093 பெறுமதியான தளபாட உபகரணங்களிற்கு 2012 முதல் 2016 வரையான ஆண்டுகளிற்கு பெறுமானத்தேய்வேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்களும் திரண்ட நிதியமும் ரூபா 22,421,768 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) 2016 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் சார்பாக எச்ஈரீசீ செயற்திட்டத்தினால் செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருந்த ரூபா 4,067,868 பெறுமதியான மூலதன வேலைகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 1,430,552 பெறுமதியான 131 இருப்பு விடயங்களை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக கருதப்பட்டிருந்தது.

### 2.2.4 பெறவேண்டிய கணக்குகள்

பதவிகள் வறிதாக்கப்பட்ட 02 கல்விசார் மற்றும் 02 கல்விசாராத பதவியணியினரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 293,734 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் மற்றும் வெளிநாட்டுக் கற்கைகளிற்கான உடன்படிக்கைகளை முறித்துக்கொண்டதன் காரணமாக 03 விரிவுரையாளர்கள் மற்றும் நுலக உதவியாளர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,735,746 கடன் மீதிகள் 02 முதல் 18 ஆண்டு கால வீச்சில் அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டன. மேலும், அந்த மீதிகள் மீது நட்டக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1982 இன் 4 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 8J(1), 8K(2) ஆம் பிரிவுகள் | பல்கலைக்கழக வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 21 கட்டிடங்களிற்காக அனுமதிகள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1997 ஒக்தோபர் 17 ஆந் திகதி 720 ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபனவிதிக் கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் 16:5:3 ஆம் பிரிவு

வெற்றிடமான பதியொன்றிற்கான பதிற்கடமைக் காலம் 03 மாதங்களிற்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக கல்விக்கான பயிற்று விப்பாளர் ஒருவர் 2016 யூலை 01 முதல் பணிப்பாளர் / பௌதீக கல்வி பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட் டிருந்ததுடன் பணிப்பாளர் / பௌதீக கல்வி பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்திற்கு சமமான தொகை இவ்வறிக்கைத் திகதி வரை படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள்

---

(i) 2013 ஏப்ரல் 10 ஆந் திகதிய 04/2013 ஆம் இலக்கம்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அதன் மீதான அறிக்கை 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், அவ்வாறான அறிக்கை 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 யூலை 10 ஆந் திகதிய 10/2017 ஆம் இலக்கம்

அனைத்துப் பதவியணியினரும் தங்களது வருகைகள் மற்றும் வெளியேற்றங்களை கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவுசெய்தல் வேண்டும். இருப்பினும், கல்விசார் பதவியணியினர் தங்களது வருகைகள் மற்றும் வெளியேற்றங்களை கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவுசெய்வதற்கு மறுத்திருந்தமையால், அது தொடர்பில் திருப்திகரமான கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படவில்லை.

(iii) 1996 பெப்ரவரி 06 ஆந் திகதிய 03/1996 ஆம் இலக்கம்

நிதியாளர் மற்றும் பணிப்பாளர் / பௌதீக கல்வி பதவிகளிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வெளியிடப்பட்ட 2017 யூன் 11 மற்றும் 2017 யூலை 05 ஆந் திகதிய செய்திப்பத்திரிகை விளம்பரங்களின் படி, சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 45 என நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, மேற்படி பதவிகளிற்கு தகைமையுள்ள பொருத்தமான ஆட்களை ஆட்சேர்ப்பதற்கான சந்தர்ப்பம் பல்கலைக்கழத்திற்கு இழப்பாகியிருந்தது.

(ஈ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை

ரூபா 100,000 தொகையான செயல்நிமித்த முற்பண எல்லையினை மிகைத்து 22 சந்தர்ப்பங்களில் 13 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 4,064,580 கூட்டுத்தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

பதவியணியினரால் முற்பணமாக எவ்வளவு தொகை கோரப்பட்டிருந்தாலும், கோரப்பட்ட அத்தொகையின் தேவைப்பாடு மற்றும் நியாயத்துவத்தினை மதிப்பீடு செய்யாது பல்கலைக்கழகத்தினால் அவை செலுத்தப்பட்டிருந்தன. அதன் விளைவாக, 16 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 479,084 கூட்டுத்தொகையான 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட முற்பணங்கள் காசாக மீளளிக்கப்பட்டிருந்தன. இந்த நடைமுறை, பொது நிதியின் துஷ்பிரயோகத்திற்கு வழிவகுப்பதாக உள்ளது.

| | | |
|---|---|---|
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனித் துணைப்பாகங்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழக செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகள் ரூபா 442,000,801 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 253,157,673 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 188,843,128 இனால் பின்னடைந்திருந்தன. பெறுமானத்தேய்வு மற்றும் ஆளனி வேதனாதிகள் முறையே ரூபா 133,856,772 மற்றும் ரூபா 102,555,276 ஆல் அதிகரித்தமையே மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை நான்கு ஆண்டுகளிற்கான நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது பற்றாக்குறை தொடர்ச்சியாக அதிகரித்துச்சென்று 2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 71,860,462 தொகையான பற்றாக்குறை 2017 ஆம் ஆண்டில் ரூபா 442,000,801 ஆக மாற்றமடைந்திருந்தது. இருப்பினும், நிதி விளைவிற்கு ரூபா 1,097,853,391 கூட்டுத்தொகையான ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் பெறுமதி சேர்த்தல் ரூபா 655,852,590 ஆன சாதகமான பெறுமதியினைக் கொண்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டில் ரூபா 608,283,670 ஆகக் காணப்பட்டமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுமதி சேர்த்தல் ரூபா 47,568,920 முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 இலக்குகளை அடைந்துகொள்ளல்

2014 – 2018 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த தந்துரோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த இலக்குகளை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகக்ள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 45 பிரதான செயலாற்றல் சுட்டிகளில் (கேபிஐ) 14 சுட்டிகள் தொடர்பாக பல்கலைக்கழகம் செயன்முன்னேற்றத்தை அறிவித்திருக்காததுடன் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தினால் காலரீதியான மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயன்முன்னேற்றத்தின் படி, தந்துரோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 31 கேபிஐ தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் ஏறத்தாழ 50 சதவீதத்தினை மாத்திரமே அடைந்துகொள்ள முடிந்திருந்தது.

(இ) "வெப்மெட்ரிக்" தரப்படுத்தலிற்கு அமைய, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு தரப்படுத்தலில் 5,000 இற்கு கீழான இடத்தினை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் அந்த தரப்படுத்தலில் 8,510 ஆம் இடத்தினை பெற்றுக்கொள்வதற்கே பல்கலைக்கழகத்திற்கு முடிந்திருந்தது. அத்துடன், முன்னைய ஆண்டில்

பல்கலைக்கழகம் 8,437 இடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பல்கலைக்கழகம் தரப்படுத்தலில் பின்னடைவை சந்திந்திருந்தது.

**4.1.2 பட்டப் பாடநெறிகள்**

கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| **பீடங்கள்** | **பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| | **2017** | **2016** | **2015** |
| பிரயோக விஞ்ஞானம் (எவ்ஏஎஸ்) | 245 | 228 | 329 |
| கலை மற்றும் கலாச்சாரம் (எவ்ஏசீ) | 326 | 306 | 239 |
| முகாமைத்துவமும் வர்த்தகமும் (எவ்எம்சீ) | 362 | 334 | 369 |
| இஸ்லாமிய மற்றும் அரபு மொழி (எவ்ஐஏ) | 435 | 480 | 362 |
| பொறியியல் (எவ்ஈ) | 88 | 092 | 101 |
| தொழில்நுட்ப பீடம் (எவ்ஓரீ) | 150 | - | - |
| மொத்தம் | 1,606 | 1,440 | 1,400 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கலை மற்றும் கலாச்சார மற்றும் இஸ்லாமிய மற்றும் அரபு மொழி பீடங்களிற்கு மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 36 மற்றும் 20 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேவேளை பிரயோக விஞ்ஞான பீடத்திற்கும் முகாமைத்துவ வர்த்தக பீடத்திற்கும் பொறியியல் பீடத்திற்கும் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 26 சதவீதத்தினாலும் 2 சதவீதத்தினாலும் 13 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. தொழில்நுட்ப பீடம் மீளாய்வாண்டில் புதிதாக தாபிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் அனைத்துப் பீடங்களிற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இஸ்லாமிய கற்கைகள் திணைக்களத்தில் விரிவுரைகளை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இஸ்லாமிய கற்கைகள் திணைக்களத்தில் 2015/2016 ஆம் கல்வி ஆண்டிற்கான II ஆம் தவணைக்குரிய 14 பாடங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் 7 பாடங்களிற்குப் பொறுறுப்பாகவுள்ள விரிவுரையாளர்களால் எந்தவொரு விரிவுரையும் நடாத்தப்படாதிருந்தமையும் ஏனைய 7 பாடங்களிற்குப் பொறுப்பாகவுள்ள விரிவுரையாளர்களால் 3 மணித்தியாலம் முதல் 16 மணித்தியாலம் வரையிலான வீச்சில் வரிவுரைகள்

பூரணப்படுத்தப்பட்டிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டன. ஆகையால், அநேக விரிவுரைகள் தற்காலிக உதவி விரிவுரையாளர்களைக் கொண்டு நடாத்தப்பட்டிருந்தன. அத்துடன் மேற்படி 14 பாடங்களிற்குரிய 112 விரிவுரை மணித்தியாலங்கள் குறித்த விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்டிருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) தற்காலிக உதவி விரிவுரையாளர்கள், வாரமொன்றிற்கு குறைந்தது 20 மணித்தியால கற்பித்தல் / பயிற்றுவித்தலை மேற்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையுடன் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த விரிவுரையாளர்கள் 20 மணித்தியால கற்பித்தல் / பயிற்றுவித்தலை மேற்கொண்டிருந்தனரா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் பொருத்தமானதோர் பொறிமுறையினை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளை ஆரம்பித்தல்**

பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்ட தொழில்சார் கற்கைகள் நிலையம் (சீஈடீபிஎல்), 2017 இல் முதலாம் ஆண்டு வெளிவாரிப் பட்டப் பாடநெறியினை நடாத்துவதற்காக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 40,000 வீதம் 1,042 மாணவர்களிடமிருந்து ரூபா 41,680,000 தொகையினை சேகரித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பட்டப் பாடநெறி நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, பட்டப்பாடநெறி நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல் தாமதடைந்ததன் காரணமாக மாணவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தனர்.

(ii) மாணவர்களிடமிருந்து கட்டணங்களை அறவிடுவதற்காக 2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் குழு மற்றும் பல்கலைக்கழக பேரவை ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) **வெளிவாரிப் பட்டப் பாடநெறிப் பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுதல்**

பீஏ, பீபீஏ மற்றும் பீ.கொம் ஆகிய வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளிற்குரிய இரண்டாம் மற்றும் மூன்றாம் கல்வி ஆண்டுகளின் II ஆம் தவணைக்காக மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் 05 முதல் 11 மாதங்கள் வரை தாமதிக்கப்பட்ட பின்னர் வெளியிடப்பட்டிருந்தன. அதேவேளை, பீஏ வெளிவாரிப் பட்டப் பாடநெறியின் முதலாம் கல்வி ஆண்டின் I ஆம் தவணைக்காக 2016 நவம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் 20 மாதங்களிற்கும் மேலாக வெளியிடப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, பட்டப் படாநெறி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றரை ஆண்டுகளிற்கும் மேலாக தாமதமடைந்திருந்தது.

**(ஈ) பிரயோக விஞ்ஞான பீடத்திற்காக ஆய்வுகூடமொன்றை தாபித்தல்**

பிரயோக விஞ்ஞான பீடத்திற்காக ஆய்வுகூடத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் வேலைகள் 2011 ஒக்தோபர் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு ரூபா 84,156,395 கிரயத்தில் 2014 பெப்ரவரி 15 ஆந் திகதி முடிவடைந்திருந்தன. அத்துடன், ரூபா 1,856,467 தொகையொன்று கூறை மின்விசிறிகள் மற்றும் மின்குமிழ்கள் போன்ற மின்சார உபகரணங்களைப் பொருத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேவையான ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டிருந்த தாமதம் காரணமாக ஆய்வுகூடத் தொகுதி, 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது 02 ஆண்டுகளிற்கும் மேலாக விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, போதியளவு ஆய்வுகூட இடவசதி மற்றும் உபகரணங்கள்

இன்மை காரணமாக மாணவர்கள் அவர்களது பயிற்சிகள் மற்றும் ஆய்வுக் கருத்திட்டங்களை பூரணப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்கொண்டிருந்தனர்.

**(உ) தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்ட தொழில்சார் கற்கைகள் நிலையம், மிகையான நிதியினை பொருத்தமான முதலீட்டு மார்க்கங்களில் முதலீடு செய்யாது மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கில் ரூபா 1 மில்லியன் முதல் ரூபா 44 மில்லியன் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு காசினை வைத்திருந்தது. இந்தக் காசினை நிலையான வைப்பொன்றில் வைப்புச் செய்திருப்பின் பல்கலைக்கழகத்திற்கு ஏறத்தாழ ரூபா 2,000,000 வருமானமொன்றை ஈட்டியிருக்க முடிந்திருக்கும் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

-------------------------------------------------------------------------------

பல்கலைக்கழகத்தின் கணக்கியல் நிதித் திணைக்களத்திற்கு 2010 ஒக்தோபர் 01 ஆந் திகதி நியமிக்கப்பட்ட விரிவுரையாளர் ஒருவர் அவரது மோசமான உடல்நிலை காரணமாக 2016 யூன் 27 ஆந் திகதி முதல் 03 மாத காலத்திற்கு மருத்துவ விடுமுறையினை எடுத்திருந்தார். 2016 செப்தெம்பர் 28 ஆந் திகதி மீண்டும் அவர் சேவைக்கு சமூகமளித்திருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து உடற்தகுதி மருத்துவ அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளாது அன்றைய தினம் முதல் விரிவுரைகளை நடாத்துவதற்கு பல்கலைக்கழகம் அவரை அனுமதித்திருந்தது. அவர் அன்றை திகதியிலிருந்து எந்தவொரு விரிவுரையினையும் நடாத்தியிருக்காத போதிலும், 21 மாதங்களிற்காக அவருக்கு ரூபா 3,037,050 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அராபிய மொழிகள் பீடத்தின் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் பயன்பாட்டிற்காக ரூபா 308,000 மொத்தக் கிரயத்தில் 2014 திசெம்பர் 10 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து விரல்அடையாள இயந்திரங்கள் 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,932,646 கிரயத்தில் 2008 முதல் 2017 வரையான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 104 டயர்கள் மற்றும் 27 டியூப்கள், அவசியமற்ற கொள்வனவுகள் மற்றும் தேவைக்கேற்ற அளவில் காணப்படாமை போன்ற பல்வேறு கிக்கல்கள் காரணமாக குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

(இ) வீதி வேலைகளிற்கு கையளிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் அளவுத் திட்டச் சிட்டையில் வீதியில் அடையாளமிடும் வர்ணப்பூச்சுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமையினைக் கருத்திற்கொள்ளாது 2016 ஆம் ஆண்டில் ரூபா 148,227 கிரயத்தில் அவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை காரணமாக 22 மாதங்களிற்கும் மேலாக களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

**4.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

---------------------------------------------

ரூபா 1,430,552 பெறுமதியான 131 பொருட்கள் மற்றும் பெறுமதி கிடைக்கப்பெறாத 100 இற்கும் மேற்பட்ட பொருட்கள் குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படாது பராமரித்தல் களஞ்சியத்தில் 02 ஆண்டுகளிற்கும் மேலாக வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், களஞ்சியத்தில் இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்காமை காரணமாக இந்தப் பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் மற்றும் நூலக பதவியணியினருக்காக அங்கிகரிக்கப்பட்ட 382 பதவியணியில் 142 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அவற்றை நிரப்புவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாது காணப்பட்டன.

(ஆ) பணிப்பாளர்/ பௌதீகக் கல்வி பதவிக்கான வெற்றிடம் 17 ஆண்டுகளிற்கும் மேலாக நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (எஸ்டிஜீ) அடைந்துகொள்ளல்

2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுடன் இணங்கியொழுகுவதற்காக மீளாய்வாண்டில் ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் செயற்படுதல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2030 ஆம் ஆண்டிற்கான குறித்த நிகழ்ச்சிநிரல் தொடர்பில் பல்கலைக்கழகம் அறிந்துவைத்திருக்காமை காரணமாக, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் உள்ளிட்ட அந்தக் குறிக்கோள்களை அடைவதற்கான மைல்கற்கள் மற்றும் அந்த இலக்குகள் அடையப்படுவதனை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகளுடன் கூடிய செயற்பாடுகளை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சில செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பிடுவதற்காக திருத்தமான புள்ளிவிபரத் தரவுகள் இருத்தல் கட்டாயமானது என்றிருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி இலக்ககள் அடையப்படுவதனை மதிப்பிடுவதற்காக திருத்தமான தரவுச் சேகரிப்பினை பேணுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் சார்பான பயிற்றுவிக்கப்பட்ட பதவியணியினர் இல்லாமை போன்றன இதற்காண காரணங்கள் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கொள்வனவுகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

#### 6.1.1 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவுத் திட்டத்திலுள்ள கால அட்டவணை மீது போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மொத்த மூலதனச் செலவினத்தில் ரூபா 130,457,247 தொகை அல்லது 17 சதவீதம் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 28 ஆந் திகதி செலவிடப்பட்டிருந்தது.

#### 6.1.2 பல்லூடக புரஜெக்டர்களைக் கொள்வனவு செய்தல்

ரூபா 2,737,500 கிரயத்தில் வயர் பொருத்துக்கள் மற்றும் இணைப்பான்களுடன் கூடிய 10 "அல்ட்ரா சோர்ட் துரோ பல்லூடக புரஜெக்டர்களும்" ரூபா 1,946,000 கிரயத்தில் இணைப்பான்களுடன் கூடிய 28 பல்லூடக புரஜெக்டர்களும் 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 28 பல்லூடக புரஜெக்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்திய தொகையில் அந்த பல்லூடக புரஜெக்டர்களை இணைப்பான்களுடன் வழங்கி, பொருத்தி பூரணப்படுத்தவதற்கான கிரயமும் உள்ளடங்கியிருந்தது. இருப்பினும், வழங்குனர் அவற்றைப் பொருத்தி பூரணப்படுத்தும் வேலைகளை 2018 யூலை 12 வரையிலும் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) ''அல்ட்ரா சோர்ட் துரோ'' இனை உள்ளடக்கிய 06 பல்லூடக புரஜெக்டர்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 10 பல்லூடக புரஜெக்டர்கள் சுவரில் பொருத்தும் இணைப்பான்களின்றி பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) எச்டீஎம்ஜ, ஓடியோ இன், ஓடியோ அவுட், வீஜீஏ அவுட், ஆர்ஜே 45, ஆர்எஸ் 232, மைக் இன் மற்றும் யூஎஸ்பீ ஆகியவற்றுடன் தொடர்புடைய புரஜெக்டர்களிலிருந்து மேசைக் கணனிகளிற்கு தொடர்பினை ஏற்படுத்தும் வயர்களைப் பொருத்துதல் 2018 யூலை 18 ஆந் திகதி வரையிலும் வழங்குனரால் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், சுவரில் பொருத்தும் இணைப்பான்கள், வயர்கள் மற்றும் ஏனைய பாகங்களிற்காக ரூபா 287,500 கொடுப்பனவை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது.

(ஈ) விரிவுரை மண்டபங்களின் இயலளவு, வெளிப்பற வெளிச்சம், திரைக்கும் புரஜெக்டருக்கும் இடையிலான தூரம் என்பன இந்த நோக்கத்திற்காக அளவுத்திட்டங்களைத் தயாரிக்கையில் கருத்திற்கொள்ளப்படாதிருந்ததுடன் அந்த அளவுத்திட்டங்கள் சம்பந்தமாக தொடர்புடைய நிபுணர்களின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை. மேலும், புரஜெக்டர்களின் விசேட பண்புகள் தொடர்பில் பொருத்தமான விழிப்புணர்வுகள் இன்றி அவை பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 6.1.3 முகாமைத்துவ வர்த்தக பீடத்திற்காக கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்

முகாமைத்துவ வர்த்தக பீடத்திற்காக கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான வேலை ஒப்பந்தத்தை பல்கலைக்கழகம் 2010 ஆம் ஆண்டில் ரூபா 112 மில்லியன் பெறுமதிக்கு கையளித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, நீடிப்புக்களுடன் கூடிய நிர்மாண வேலைகள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். நிர்மாண வேலைகள் 2014 ஏப்ரல் 20 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,977,412 தொகையான தாமதக் கட்டணங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த தாரரிடமிருந்து அறிவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனையின் 13.7 ஆம் விதிக்கு முரணாக ஆரம்ப விடயங்களிற்குச் சீராக்க முடியாத கூறிற்காக ஒப்பந்த தாரருக்கு ரூபா 985,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், பெறுமதிசேர் வரி (VAT) நீங்கலான மொத்த ஒப்பந்த விலையில் 5.25 சதவீத மதியுரைக் கட்டணத்தினை பல்கலைக்கழகம் செலுத்துதல் வேண்டும். இருப்பினும், இரண்டு வேறுபட்ட வீதங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழகம் இக்கட்டணத்தைக் கணிப்பீடு செய்திருந்தது. அதன் விளைவாக, ரூபா 413,723 தொகை மதியுரைஞருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 6.1.4 பிரதான நூலகத்திற்காக கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்

ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனையின் 13.7 ஆம் விதிக்கு முரணாக பிரதான நூலகத்திற்காக கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் வேலைகளின் ஆரம்ப விடயங்களிற்குச் சீராக்க முடியாத கூறிற்காக பல்கலைக்கழகம் ஒப்பந்த தாரருக்கு ரூபா 1,510,837 தொகையினை செலுத்தியிருந்தது. அத்துடன், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், பெறுமதிசேர் வரி (VAT) நீங்கலான மொத்த ஒப்பந்த விலையில் 5.25 சதவீத மதியுரைக் கட்டணத்தினை பல்கலைக்கழகம் செலுத்துதல் வேண்டும். இருப்பினும், இரண்டு வேறுபட்ட வீதங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழகம் இக்கட்டணத்தைக் கணிப்பீடு செய்திருந்தது. அதன் விளைவாக, ரூபா 245,415 தொகை மதியுரைஞருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 6.2 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த இதுவரை தீர்வுகாணப்படாத விடயங்கள்

பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக, விரிவுரையாளர்களால் உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டிருந்தமைக்கு எதிராக அவர்களிடமிருந்து பிணைமுறிப் பெறுமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு 06 மாதங்களிற்கும் மேல் தாமதித்திருந்தமையால் ரூபா 1.73 மில்லியன் நட்டம் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டிருந்தது. இருப்பினும், அந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு தவறியமை. |
| (ii) | சுய நிதியிடல் பாடநெறிகளின் முகாமைத்துவம் | மேலதிக காசினை முறையாகப் பயன்படுத் துவதற்கு தவறியமை மற்றும் கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்படுகின்றமை. |
| (iii) | உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் மீதான கட்டுப்பாடு | அறவீடுகளை துரிதப்படுத்தவதற்கு போதிய கவனம் செலுத்தாமை |
| (iv) | மாணவர் வரவுப் பதிவேட்டினை பேணுதல் | விரிவுரையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களால் வருகைப் பதிவேடுகளில் கையொப்பமிடுதல் மற்றும் அவற்றை நாள்தோரும் சமர்ப்பிப்பதில் அதிக கவனம் தேவைப்படுகின்றமை |
| (v) | ஆளனி நிர்வாகம் | கல்விசார் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியமை காரணமாக வருகைதரும் விரிவுரையாளர்களின் சேவைக்காக அதிகளவு தொகை செலவிடப்படுகின்றமை. |
| (vi) | பராமரிப்புக் களஞ்சியத்தில் இருப்புக் கட்டுப்பாடு | களஞ்சியத்தில் உரிய பதிவுசெய்தல் மற்றும் அறிக்கையிடல் முறைமை காணப்படாமை. |